தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 1, திருவள்ளுவர் ஆண்டு—2052

2021 ஆகஸ்ட் 17, செவ்வாய்க்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“பெரும்பொருளாற் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு.”

பொருள் வளம் நிறைந்ததாகவும், பிறர் போற்றத்தக்கதாகவும், கேடற்றதாகவும், நல்ல விளைச்சல் கொண்டதாகவும் அமைவதே சிறந்த நாடாகும்.

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. தகவல் கோரல்

மாவுப் பூச்சி தாக்குதலால் மரவள்ளிக் கிழங்கு பயிர் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பேரவை விதி 55–ன்கீழ் தங்களிடம் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்தேன். இதுவரை அந்தக் கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அது முக்கியமான பிரச்சினை சம்பந்தப்பட்டது. வேளாண்மை நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த நேரத்தில், வேளாண் பெருங்குடிமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அதை அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து,*

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, அதற்குப் பதிலைப் பெற வேண்டுமென்று எண்ணினேன். நான் அந்த அறிவிப்பைக் கொடுத்து மூன்று நாட்கள் ஆகின்றன. இதுவரை அந்த கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஏனென்றால் இது முக்கியமான பிரச்சினையாகும். இன்னும் இரண்டு நாட்கள்தான் அவை நடைபெற இருக்கின்றது. அதற்குப் பிறகு இந்தப் பிரச்சினையை எழுப்ப முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் தந்த கவன ஈர்ப்பு அறிவிப்பு. . . (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், அரியலூர், பெரம்பலூர் உள்ளிட்ட பத்து மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் மரவள்ளிக் கிழங்கைப் பயிரிட்டிருக்கின்றனர். அந்த மரவள்ளிக் கிழங்கைப் பயிரிட்டுள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் சொல்வதைப் புரிந்துகொண்டேன்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அங்கு மாவுப் பூச்சியின் தாக்குதலால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் சொல்லிவிட்டீர்கள்; நான் சொல்லிவிடுகிறேன். உங்களது கவன ஈர்ப்பு அறிவிப்பு 14 ஆம் தேதி கிடைத்தது. அது துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் வர வேண்டும். இன்னொரு விஷயம் உங்களுக்குத் தெரியாத விஷயமல்ல. (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இது முக்கியமான பிரச்சினை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நான் சொல்லிவிடுகிறேன். வேளாண்மைத் துறை பட்ஜெட் மீதான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வேளாண்மைத் துறை மீதான பட்ஜெட்டில் ஏற்கெனவே பேசியிருக்கிறீர்கள். இனிமேல் பேசுவதற்கும், இன்னும் மூன்று நாட்கள் வாய்ப்பிருக்கிறது.*

2021 ஆகஸ்ட் 17] [பேரவைத் தலைவர்]

இதற்கிடையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு பதில் இருக்கிறதா? (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறேன்; பேச வேண்டுமென்கிறார். நீங்கள் அந்தக் கவன ஈர்ப்பு அறிவிப்பை எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லி, அதற்குப் பிறகுதான் அவரைப் பேச அழைக்க வேண்டும். முதலில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்களா என்று பேரவைத் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்ள வேண்டும். இந்த இரண்டும் நிகழ்ந்த பிறகுதான் அனுமதிக்க வேண்டும். அறிவிப்பு கொடுத்த உடனேயே, இதில் பேச அனுமதிக்க முடியாது. முதலில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த* notice–ஐ *ஏற்றுக்கொண்டார்களா; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல தயாராக இருக்கிறார்களா என்பதைத் தெரிந்து கொண்டு, பிறகுதான், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்பு 'ஏற்றுக்கொள்ளப்பட்டது, பேசுங்கள்' என்று நீங்கள் சொன்னால்தான், பேச வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கவன ஈர்ப்பு அறிவிப்பு துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது, பதில் வரவில்லை. பதில் வந்த பிறகுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயாராக இருப்பார்கள். ஆகையினால், பதில் இன்றைக்கு வந்துவிட்டது என்றால், அடுத்த நாளைக்கு* Zero hour–*ல் 'பதில் சொல்லுங்கள்' என்று நான் அவர்களைப் பதில் சொல்லச் சொல்கிறேன். அதோடு, கூடுதல் செய்தியாக நான் என்ன சொல்கிறேன் என்றால், வேளாண்மைத் துறை பட்ஜெட் மீதான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நேற்று ஒருநாள் உரையாற்றியிருக்கிறீர்கள்; இன்னும் மூன்று நாட்கள் உரையாற்றுகின்ற வாய்ப்பிருக்கிறது. இந்த கவன ஈர்ப்பு அறிவிப்பு குறித்தும் நீங்கள் அதிலே பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் பெறுகின்ற வாய்ப்பும் இருக்கிறது என்பதை உங்களின் தகவலுக்காகச் சொல்கிறேன். பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறீர்களா? சரி, சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள்*

சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும், பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரவள்ளிக் கிழங்கு பயிரினை நம்பி சேலம், நாமக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் சுமார் 470 ஆலைகள் இன்றைக்குச் செயல்பட்டு வருகின்றன. ஒரு இலட்சம் தொழிலாளர்கள் இந்த ஆலைகளில் பணிபுரிந்து வருகின்றனர். அதோடு, இன்றைக்கு ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச், Salem Starch and Sago Manufacturers' Service Industrial Co–operative Society Limited (SAGOSERVE) கூட்டுறவு விற்பனை நிலையத்தின் மூலமாகத்தான் ஆண்டொன்றுக்கு சுமார் 1,500 கோடி ரூபாய்க்கு ஏலமிடப்படுகிறது.

இந்தப் பயிரின் முக்கிய எதிரி மாவுப் பூச்சியாகும். தற்போது மாவுப் பூச்சியின் தாக்குதலால் மரவள்ளிக் கிழங்கு பயிர் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி, அதன் உற்பத்தி குறைந்து, விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டம் ஏற்படுகின்ற சூழல் ஏற்பட்டுள்ளது. சென்ற ஆண்டு மாவுப் பூச்சியின் தாக்கம் ஆரம்ப நிலையிலே கண்டறியப்பட்டு, அம்மா அவர்களின் அரசால் உடனடியாக அதற்கு ரூ.5 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டது.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பிரச்சினையைப் பதிவு செய்துவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும், அமைச்சர் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: இது விவசாயிகளுடைய பிரச்சினை, அரசின் கவனத்திற்கு முழுமையாகக் கொண்டுவரவேண்டும் அல்லவா? (குறுக்கீடுகள்) நான் முழுவதுமாக சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லட்டும். அரசு செலவில். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்

2021 ஆகஸ்ட் 17] [திரு. துரைமுருகன்]

அவர்களுக்கு Zero hour–ல் பேசுவதற்கு அவைத் தலைவர் அனுமதித்தால் பேசலாம். அதில் நான் குறை சொல்லவில்லை. ஆனால், இப்பொழுது நடந்துகொண்டிருப்பது என்னவென்றால், நீங்கள் விதி 55–ல் பேசுவதாக இருந்தால் . . . (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் இருக்கையிலிருந்து எழுந்து நின்றனர்.)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *நான் விதி 55–ல் பேசுவதற்கு அறிவிப்பு கொடுத்திருந்தேன்; ஆனால், எடுத்துக்கொள்ளப் படவில்லை.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அப்படி என்றால், நீங்கள் என்ன செய்யவேண்டும்! நான் பேரவை விதி 55–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன் என்று நீங்கள் கேட்க வேண்டும். (குறுக்கீடு) நான் ஒப்புக்கொள்கிறேன். "நான் 55–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருந்தேன், அது என்னவானது?" என்று கேட்கவேண்டும். அவர் அதற்குப் பதில் சொல்லவேண்டும். விதி 55–ன்கீழ் எடுத்துக்கொண்டால்தான் நீங்கள் பேசமுடியும். விதி 55–ன்கீழ் எடுத்துக்கொள்ளப்படும்போதுகூட, 'இந்த நிகழ்வை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்' என்றுதான் நீங்கள் சொல்லவேண்டும். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) நான் உங்களுக்கு time தருகிறேன், அப்போது சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் உங்களுக்குச் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு கொறடா (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் உங்களுக்கு time தருகிறேன். உட்காருங்கள். நான் சொன்னதற்குப் பின்னர் பேசுங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சிக் கொறடா என்னிடம் வந்து Zero hour–ல் இந்தப் பிரச்சினையை raise மட்டும் பண்ணுவோம். (குறுக்கீடு) பதில் வந்ததென்றால் (குறுக்கீடு) இல்லை, இல்லை. கேளுங்கள். நீங்கள் முழுவதும் பேசமுடியாது. பதில் வந்தபிறகுதான் நீங்கள் முழுவதும் பேசமுடியும். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்கு ஒன்று தெரியவேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் Zero hour–ல் பேசுகிறாரா? விதி 55–ன்கீழ் பேசுகிறாரா என்று தெரியவேண்டும். (குறுக்கீடுகள்)*

Zero hour–ல் பேரவைத் தலைவர் அனுமதித்தால் பேசலாம். பேரவைத் தலைவர் அனுமதிக்கிறாரா என்று கேட்டுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் விதி 55–ன்கீழ் கொடுத்த அதே பிரச்சினையை Zero hour–ல் எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *நீங்கள் எடுக்கவேயில்லையே! நாங்கள் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: நான் பேரவை விதிகளைக் குறிப்பிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் என்னிடம் வந்தார்கள். அவர்கள் Zero hour–ல் raise செய்கிறோம். பதில் இருந்தால் சொல்லுங்கள் (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் பேசியாகிவிட்டது. எல்லா விஷயங்களையும் பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், பேசுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்பட்ட இடங்களில் அரசு மருந்து தெளிக்க நடவடிக்கை எடுத்து மரவள்ளிக் கிழங்கு பயிரைக் காப்பாற்றி, விவசாயிகளை நஷ்டத்திலிருந்து மீட்டெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், அரியலூர், பெரம்பலூர் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் 10,000 ஏக்கரில் பயிரிடப்பட்ட மரவள்ளிக் கிழங்கு பயிர்கள் மாவுப் பூச்சிகளினால் பாதிக்கப்பட்டுள்ளன என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே, உடனடியாக மாவட்ட அளவில் உள்ள வேளாண் துறை அதிகாரிகளை இப்பகுதிகளுக்கு நேரடியாக அனுப்பியும், தேவையான நிதியை ஒதுக்கியும், பூச்சி மருந்து தெளித்தும், மாவுப் பூச்சித் தாக்குதலிலிருந்து மரவள்ளிக் கிழங்கு பயிரிட்ட விவசாயிகளைக் காக்கவேண்டும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும். (குறுக்கீடு) இது ஒன்றுமே கிடையாது. பதில் கொடுக்கலாம்.*

2021 ஆகஸ்ட் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் தந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. துறையிலிருந்து பதில் வந்ததும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுவார்கள். மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் பதில் சொல்லத் தயாராகத்தான் இருக்கிறோம். தமிழ்நாட்டில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்படும் மாவட்டங்களில் தற்போது மாவுப் பூச்சிகளின் தாக்குதல் மற்றும் சேதம் அதிக அளவில் உள்ளது. ஆப்பிரிக்கக் கண்டத்தில் பெருமளவில் சேதம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் அயல் தேசத்து மரவள்ளி மாவுப் பூச்சி* Phenacoccus manihoti Matile–Ferrero, *2020 ஆம் ஆண்டு பிற்பகுதியில் கேரளத்திலும், தமிழ்நாட்டிலும் ஊடுருவியது. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் உள்ளே வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை அப்போது சரியாகத் தடுத்திருந்தால், இப்போது பரவியிருக்காது. அப்போது சரியாகத் தடுக்காததால் இப்போது பரவிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கடந்த வாரம் திடீரென்று ஓர் அறிக்கை வெளியிட்டார்கள். செய்தித்தாள்களில் இதுகுறித்த செய்திகள் வந்திருப்பது தெரிந்தவுடன் நாங்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்துவிட்டோம். ஆக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகளின் தொடர் வயல்வெளி ஆய்வில் இப்பூச்சியினம் தற்போது மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்படும் மாவட்டங்களில் பரவலாகத் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது தெரிய வந்துள்ளது. இதன் தாக்கம் தமிழகத்தில் குறிப்பாக, நாமக்கல், சேலம், திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர், கரூர் ஆகிய மாவட்டங்களில் மிகுந்த பாதிப்பினையும், இம்மாவட்டங்களை ஒட்டிய பிற பகுதிகளில் மத்திய நிலையிலும், மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்படும் ஏனைய மாவட்டங்களில் குறைந்த அளவிலும் உள்ளது. அயல் தேசத்து மாவுப் பூச்சியின் தாக்கம் 10 சதவிகிதம் முதல் 80 சதவிகிதம் வரை இம்மாவட்டங்களில் உள்ளது. இவ்வினத்தோடு 4 வகை உள்நாட்டு மாவுப் பூச்சியின் தாக்குதலும் மரவள்ளிக் கிழங்கில் காணப்படுகிறது.*

முற்பகல் 10–10

சேத அறிகுறிகள்: *இலையின் அடிப்பகுதி, குருத்து, கிளைகள் மற்றும் தண்டுப் பகுதியில் திட்டு திட்டாக மாவுப் பூச்சிகள் படர்ந்து இருக்கும். மாவுப் பூச்சிகள் மரவள்ளி செடித் தண்டில்*

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [2021 ஆகஸ்ட் 17

சாற்றை உறிஞ்சும்போது உமிழ்நீர் வழியாக நச்சுப் பொருட்களை உட்செலுத்துவதால் நுனிப் பகுதிகளிலுள்ள இலைகள் மற்றும் நுனிக் குருத்து உருமாறி, வளர்ச்சி குன்றியும், காய்ந்தும்விடும். பாதிக்கப்பட்ட இலைகள் ஒன்றாக இணைந்து கொத்துக் கொத்தாகச் சுருண்டு, பந்து போன்ற முடிக் கொத்தாக, செடியின் நுனியில் காணப்படும். இந்தத் தாக்குதலின் தீவிரம் அதிகரிக்கும்போது செடிகளின் இலைகள் உதிர்ந்து, செடிகள் வாடி, காய்ந்துவிடும். இந்தப் பூச்சியானது, உண்ணும்போது தேன் போன்ற திரவத்தை வெளியேற்றுவதால் கருமை நிறத்தில் பூசனப்பூச்சி ஏற்படும்.

மரவள்ளியில் மாவுப் பூச்சியின் தாக்கம் தென்பட்ட காலத்திலிருந்து துறை கண்காணிப்பில் பூச்சியியல் துறை விஞ்ஞானிகள் ஆய்வில் ஈடுபட்டனர். கடந்த ஆண்டு வயல்வெளி பரிசோதனைகள் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வின் முடிவில் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளைக் கையாளும்போது, மாவுப் பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம் என்பது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. மாவுப் பூச்சியின் தாக்குதலைக் குறைத்து, பயிர் மகசூலைத் தக்க வைத்துக்கொள்ள கீழ்க்கண்ட பரிந்துரைகளை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கியுள்ளது:

மாவுப் பூச்சியின் தாக்கம் காணப்படும் செடிகளின் கருணைகளை நடவுப் பொருளாக உபயோகிப்பதைத் தவிர்க்கவேண்டும். கருணைகளை Chlorpyriphos 20EC பூச்சிக் கொல்லியில் 15 நிமிடங்களுக்கு நேர்த்தி செய்த பின் நடவு செய்ய வேண்டும். மரவள்ளி மாவுப் பூச்சிக்கு பல்வேறு களைச் செடிகள் விருந்தோம்பிகளாக இருப்பதனால், மரவள்ளித் தோட்டங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் களைச் செடிகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மண்வளத்தை அதிகரிக்கவும், செடியின் வளத்தினைக் கூட்டவும் பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இட வேண்டும். தோட்டங்களில் மாவுப் பூச்சிகள் தாக்கிய செடிகளை அறுவடைக்குப் பின் அப்புறப்படுத்தி அழிக்கவேண்டும். மரவள்ளி பயிரிடப்படும் வயல்வெளிகளில் ஆரம்பக் கட்டத்திலிருந்து தொடர்ச்சியாக மாவுப் பூச்சியினைக் கண்காணித்து வர வேண்டும். தாக்குதல் அறிகுறி தென்பட்டவுடன், கீழ்க்கண்ட நடைமுறைகளைக் கவனத்துடன் பின்பற்ற வேண்டும்:

2021 ஆகஸ்ட் 17] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

மாவுப் பூச்சியின் ஆரம்பநிலைத் தாக்கத்தின்போது, ஏக்கருக்கு மீன் எண்ணெய் சோப்பு 400 மில்லி லிட்டர், Azadirachtin *15%,* EC *1,000 மில்லி லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும். கீழ்க்காணும் பூச்சிக்கொல்லிகளை சுழற்சி முறையில் தேவையான நேரத்தில் தெளிக்க வேண்டும்:*

மரவள்ளி பயிரிடப்பட்ட பகுதிகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பூச்சிக் கொல்லிகளை அதிக கொள்ளளவு கொண்ட தெளிப்பான் போன்றவற்றைப் பயன்படுத்தி தாவரத்தின் அனைத்துப் பாகங்களிலும், உதிர்ந்த இலைகள் மற்றும் களைகளில் படும்படி நன்றாகத் தெளிக்க வேண்டும். இப்பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்த ஏக்கர் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.3,900/– செலவு ஆகிறது. இந்த தாக்குதல் குறித்து அறிந்தவுடன் வேளாண் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், விஞ்ஞானிகள் அந்தந்தப் பகுதிகளிலுள்ள கிராமங்களுக்குச் சென்று, நோய் பாதிக்கப்பட்ட செடிகளை அகற்றுகின்ற பணிகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அதேபோன்று, விவசாயிகளுக்கும் தக்க ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். இதுதொடர்பாக அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் செய்தித்தாள்களில், என்னென்ன செய்ய வேண்டும், என்னென்ன தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று விளம்பரப்படுத்தி, நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திய காரணத்தினால் இப்போது அது கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. இது கடந்த கால ஆட்சியிலும் ஏற்பட்டது. இப்போது நாங்கள் பொறுப்பேற்ற இந்தக் குறுகிய காலத்தில், ஆட்சிப் பொறுப்பேற்று 100 நாட்கள் கூட ஆகவில்லை; இருந்தாலும் செய்தித்தாளில் செய்திகள் வந்திருப்பதைப் பார்த்தவுடன், விவசாயிகள் கூறியவுடன், அதைக் கட்டுப்படுத்த நாங்கள் தொடர் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறோம். கண்டிப்பாக, முழுவதுமாக, ஒட்டுமொத்தமாக இந்த நோய் பரவாமல் இருப்பதற்கு உரிய வழிமுறைகள், நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற பாதிப்பு உங்கள் ஆட்சிக் காலத்திலும் இருந்தது; இப்போதும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் (குறுக்கீடு) நான் ஒரு வார்த்தை கூறிய பிறகு பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உட்பட, இந்த அவைக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கின்றேன். விதி எண் 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டால்,*

[பேரவைத் தலைவர்] [*2021 ஆகஸ்ட் 17*

7 நாட்களுக்குள் அது எடுக்கப்பட வேண்டும். அவ்வாறு எடுக்கப்படவில்லையென்றால்தான் அதுகுறித்து, நேரமில்லா நேரத்திலோ, வேறு நேரத்திலோ எழுந்து கேள்வி கேட்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு என்பது இந்த அவை விதிகளை நன்கு அறிந்த உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதேபோல, அது ஏற்றுக்கொள்ளப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டால் மட்டும்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்குப் பிறகு ஒரு துணைக் கேள்வி கேட்க முடியும். தற்போது கேள்வி கேட்டீர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். ஆகவே, இத்துடன் இது முடிந்துவிட்டது. இனி வருங்காலங்களில் இதை நீங்கள் முன்மாதிரியாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்களைப் பேச அழைக்கிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் சொல்லுங்கள். (குறுக்கீடு) நான் சொல்லியாகிவிட்டது. இதில் உங்களுக்கு துணைக் கேள்வியே கிடையாது. இருந்தாலும் கேளுங்கள்.

முற்பகல் 10–15

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே ready ஆக பதில் இருக்கின்றது. இதெல்லாம் மக்களுக்குப் போய்ச்சேரவேண்டும்; விவசாயிகளுக்குச் சேர வேண்டு மென்பதற்காகத்தான் இந்த வினாவை எழுப்பினேன். நான் எதிர்பார்த்தது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டீர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: விதி எண் 55-ன்கீழ் கேள்வி கேட்டால், தெளிவாகப் பதில் கிடைக்குமென்று நினைத்தேன். இருந்தாலும், மாண்புமிகு அமைச்சர் நல்ல விளக்கம் கொடுத்திருக்கிறார். இதிலே ஒன்றே ஒன்று. இந்த மாவுப் பூச்சியால் பாதிக்கப்பட்டு நஷ்டம் அடைந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு நிவாரணம் வழங்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது வேளாண்மைத் துறை பட்ஜெட்டில்தான் விவாதம் நடக்கிறது. ஒரு நாள் விவாதத்தில் பேசியிருக்கிறார்கள். இன்னும் 3 நாட்கள் விவாதத்தில் பேசுவதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. உங்கள் கட்சி உறுப்பினர்கள்

2021 ஆகஸ்ட் 17] [பேரவைத் தலைவர்]

6 பேர் பேசவிருக்கிறார்கள். அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். அதையும் நீங்கள் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

2. திருத்திய வரவு—செலவுத் திட்டம் மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2021—2022, பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின்மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைப்பார்கள்.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தமிழக அரசின் 2021–2022 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி. உலகம் போற்றும் உத்தமத் தலைவர், சத்துணவு கண்ட தல நாயகர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைத் தாழ்பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உலகளாவிய பல்வேறு தலைவர்களுக்கு மத்தியில், ஆளுமைத் திறனோடு எவருக்கும் அடிபணியாத அற்புதத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தாழ்பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

எதிர்புறம் அமர்ந்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர்களுக்கும் வணக்கம். பல்வேறு சோதனைகளுக்கிடையே, ஒரு வாரம் என்றார்கள்; ஒரு மாதம் என்றார்கள்; மூன்று மாதங்கள் என்றார்கள்; ஓராண்டு என்றார்கள். அத்தனையையும் முறியடித்து, தமிழக அரசின் முதலமைச்சராக 1,540 நாட்கள் ஆட்சியில் இருந்து, சாதனைகள் பல படைத்து (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றே விழுக்காடு வித்தியாசத்தில் முதலமைச்சர் பதவியை நழுவவிட்டாலும், தனது ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டுமென்பதற்காக, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்று, தனது ஒவ்வொரு அசைவும் மக்கள் நலனுக்காக என்பதை உணர்த்திக்கொண்டிருக்கிற மாண்புமிகு கழக இணை